Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

பக்கங்கள் 12

சுடர் : 38
கதிர் : 37

திங்கட்கிழமை 02 ஜனவரி 2023 | மார்கழி 18 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2053

காலச்சூழலை உணர்ந்து

## தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒற்றுமையை வலுப்படுத்துக

- பரந்துபட்ட கூட்டமைப்பை உருவாக்க வலியுறுத்தி சம்பந்தனுக்கும் மாவைக்கும் ரெலோ, புளொட் தலைவர்கள் கடிதம்
- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பதிவு அவசியம்

**யாழ்ப்பாணம், ஜனவரி 2**

தற்போதைய காலத்தின் தேவையை உணர்ந்து தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒற்றுமையை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பரந்துபட்ட அமைப்பாக மாற்றவேண்டும் என்றும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா ஆகியோருக்கு ரெலோ மற்றும் புளொட் தலைவர்களால் கடிதம் அனுப்பிவைக்கப்படவுள்ளது.

»11

## கல்லுண்டாயில் வாள்வெட்டு

யாழ்., ஜன. 2

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லுண்டாய் வைரவர் ஆலயத்துக்கு அருகாமையில் நேற்று இரவு இடம்பெற்ற வாள்வெட்டில் 34 வயதுடைய நபர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

வாள்வெட்டுக்கு இலக்கான நபர், வீட்டுக்கு முன்பாக வீதியில் நின்றவேளை முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிளில் வந்த கும்பல் வாள்வெட்டை மேற்கொண்டு அங்கிருந்து தப்பித்துச் சென்றுள்ளது.

படுகாயமடைந்த நபர் '1990' இலக்க அவசர அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

(அ-ஒ-27)

யாழில் சில யுவதிகள்

## போதைப் பொருளுக்காக பாலியல் துர்நடத்தை

யாழ்ப்பாணம், ஜன. 2

உயிர்கொல்லி போதைப்பொருள்களான ஹெரோய்ன் மற்றும் ஐஸ் என்பனவற்றைக் கொள்வனவு செய்வதற்காக பாலியல் துர்நடத்தையில் 23 வயதுக்குட்பட்ட இளம் பெண்கள் சிலர் ஈடுபட்டுள்ளனரெனத் »11

யாழ். மாவட்டத்தில் மட்டும்

## போதைக்கு அடிமையான 742 பேர் இனம்கண்டறிவு

யாழ்ப்பாணம், ஜன. 2

யாழ். மாவட்டத்தில் கடந்த ஆண்டு மாத்திரம் உயிர் கொல்லிப் போதைப்பொருளுக்கு அடிமையான 742 பேர் இனம்காணப்பட்டுள்ளனர். இது முன்னைய »11

## 10 வயதுச் சிறுமி மீது துஷ்பிரயோக முயற்சி

மாட்டிய முதியவர் நையப்புடைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 2

மானிப்பாய் பொலிஸ் பிரிவுகுட்பட்ட பகுதியில் 10 வயதுச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்த முயன்ற 72 வயதான முதியவர் இளைஞர் »12

வரலாற்றில் முதல் தடவை

## கலண்டர்கள், டயரிகள் அச்சிடல் மிகக்குறைவு

பொருளாதார நெருக்கடியின் தாக்கம் எதிரொலிப்பு

கொழும்பு, ஜன. 2

இலங்கை வரலாற்றில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான நாள்காட்டிகள் (கலண்டர்கள்) மற்றும் நாள்குறிப்பேடுகள் (டயரிகள்) அச்சிடப் »11

வாணவேடிக்கைகளுடன்

## புத்தாண்டை வரவேற்ற வடக்கு மாகாண மக்கள்

யாழ்ப்பாணம், ஜன. 2

கடந்த இரண்டு ஆண்டுகளாக பெரும் எடுப்பிலான நள்ளிரவு புத்தாண்டை வரவேற்கும் கொண்டாட்டங்கள் இடம்பெறாத நிலையில், இந்த ஆண்டு வாணவேடிக்கைகளுடனும், கேளிக்கை நிகழ்வுகளுடனும், ஆலய வழிபாடுகளுடனும் வடக்கு மக்கள் வரவேற்றனர். »11

## குழு மோதலில் முன்பகை: இளைஞன் குத்திக்கொலை

புத்தாண்டில் கொடூரம்

கிளிநொச்சி, ஜன. 2

கிளிநொச்சி, விநாயகபுரத்தில் இரு குழுக்களுக்கு இடையிலான பகைமையின் விளைவாக - பழி வாங்கும் நடவடிக்கையாக இளைஞர் ஒருவர் அடித்தும், குத்தியும் புத்தாண்டு நாளான நேற்று அதிகாலை கொலை செய்யப்பட்டுள்ளார்.

அதேயிடத்தைச் சேர்ந்த தவக்குமார் சுரேஸ் (வயது - 26) என்ற இளைஞரே நேற்று அதிகாலை »11

மதுபோதையில்

## பட்டாசு வர்த்தக நிலையத்ினுள் தீவைத்துக் கொளுத்திய கும்பல்

மக்கள் சிதறி ஓட்டம்

வவுனியா, ஜன. 2

வவுனியா, ஹொரவப்பொத்தானை வீதியிலுள்ள வர்த்தக நிலையமொன்றினுள் மதுபோதையில் புகுந்த கும்பல் அங்கு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பட்டாசுகளை வர்த்தக நிலையத்தினுள் தீவைத்து வெடிக்கச் செய்துள்ளனர். »12

மின்கட்டணத்தை

## 2000 சதவீதத்தால் உயர்த்த உத்தேசம்

அரசாங்கத்தின் புத்தாண்டு பரிசு

கொழும்பு, ஜன. 2

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குள் மின்சாரக் கட்டணத்தை 2 ஆயிரம் சதவீதத்தால் உயர்த்தும் உத்தேச யோசனை அமைச்சரவையில் இன்று »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள் 767 கோடி ரூபா நிலுவை

கொழும்பு, ஜன. 2

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களால் பெறப்பட்ட 767 கோடி ரூபா கடன்தொகை மீள செலுத்தப்படாது தற்போதுவரை நிலுவையிலுள்ளது என தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

இலங்கை பெற்றோலியக் கிடங்கு முனைய நிறுவனம் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் ஊழியர்களுக்கு கடன் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டபோதும் நிர்வாகத்தில் சரியான நிதிக் கொள்கை கையாளப்படவில்லை.

மாதாந்தக் கடன் தவணை மற்றும் இதர விலக்குகள் ஊழியரின் சம்பளத்தில் 50 சதவீதத்துக்குக் குறையாமல் இருக்கவேண்டும்.

ஆயினும் ஊழியர்களின் மாதக் கடன் தவணை சம்பளத்தில் 50 சதவீதத்தைத் தாண்டியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடன் தொகையை ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தில் முழுமையாகவோ அல்லது அதற்கு அதிகமாகவோ மீளச் செலுத்துவதை தவிர்க்க மேலதிக நேர பணிகளும் செய்யப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும் முறையற்ற கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளதுடன் நிறுவனங்களின் மேலதிக நேரச் செலவுகளும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இரண்டு நிறுவனங்களின் ஊழியர்களும் கடனைச் செலுத்தத் தவறியமை தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளன. அதனை நிர்வகிப்பதற்குத் தேவையற்ற வளங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இந்த ஊழியர்களின் கடன் திட்டத்தை வணிக வங்கி அல்லது நிதி நிறுவனத்துக்கு மாற்றுவது தொடர்பாக ஆராய்ந்து பரிந்துரைகள் வழங்கப்பட்டபோதும் இது குறித்து கவனம் செலுத்தவில்லை- என்றுள்ளது. (ச-இ)

# அடுத்த ஆண்டுவரை நிகழ்வுகள் இரத்து!

*அரச செலவை கட்டுப்படுத்த நடவடிக்கை*

கொழும்பு, ஜன.2

அரசாங்க நிறுவனங்கள் பல நிகழ்வுகளுக்கு செலவு செய்வதை நிறுத்தும் உத்தரவு அடுத்த ஆண்டுவரை நடைமுறையில் இருக்கும் என்று நிதி அமைச்சு புதிய சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான செலவினங்களை அங்கீகரிக்கும் மற்றும் பொதுச் செலவினங்களை நிர்வகித்தல் என்ற தலைப்பில் நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தனவால் இந்தச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

வருடாந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளின் மூலம் ஒதுக்கப்படும் நிதி வரம்புகள் அடுத்த வருடத்துக்கு மிகையாகாத வகையில் செலவுகளை நிர்வகிப்பது அதிகாரிகளின் பொறுப்பு என வலுவாக வலியுறுத்தப்பட்டுள்ளது. (எ-14-இ)



# பஸ்– உழவியந்திர விபத்து சாரதி ஒருவர் படுகாயம்!

மன்னார், ஜன.2

கடற்படை பஸ் மற்றும் உழவியந்திரம் மோதி ஏற்பட்ட விபத்தில் சாரதி ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்துச் சம்பவம் மன்னார், சிலாபத்துறை-புதுவெளிப்பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் நிகழ்ந்துள்ளது.

மன்னார் -முருங்கன் பகுதியிலிருந்து சிலாபத்துறை நோக்கிச் சென்ற உழவுவியந்திரமும் அவ்வழியே வந்த கடற்படையினரின் பஸ்ஸும் மோதி விபத்துக்குள்ளாகியன. விபத்தில் உழவியந்திர சாரதி படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அத்துடன் விபத்தில் உழவியந்திரமும் முற்றாக சேதமடைந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது. விபத்துத் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-14,213)

# ஜனாதிபதி மாளிகை ஓவியங்கள் மாயம்!

கொழும்பு, ஜன. 2

போராட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகையில் பிரவேசித்த பின்னர் அங்கிருந்த 39 மர மற்றும் கன்வஸ் ஓவியங்கள் காணாமற் போயுள்ளன என்று தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் குழு மேற்கொண்ட விசாரணையின் போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

ஓவியங்கள் காணாமற்போன நிலையில் தற்போது ஜனாதிபதி மாளிகையின் 209 ஓவியங்கள் மற்றும் சித்திரங்கள் பாதுகாப்புக்காக தொல் பொருள் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன. திணைக்கள அதிகாரிகள் குழுவொன்று ஜனாதிபதி மாளிகைக்குச் சென்று தற்போது அடிப்படை பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. ஓவியங்களின் சிதைவு நிலைமைகளை ஆராய்ந்து, பாதுகாப்புத் தொடர்பான பூர்வாங்க பரிந்துரை அறிக்கையை தயாரிப்பதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் கீதானி குருப்புஆராச்சி தெரிவித்தார். (எ-14,இ)



# திடீரெனத் தீப்பற்றி எரிந்த மோ.சைக்கிள்

வவுனியா, ஜன. 2

வவுனியா - வைரவபுளியங்குளம் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மோட்டார் சைக்கிள் ஒன்று திடீரென தீப்பற்றி முழுமையாக எரிந்துள்ளது.

பிளசர் ரக மோட்டர் சைக்கிள் ஒன்று இயங்கவில்லை என்று வைரவபுளியங்குளம் பகுதியில் உள்ள மோட்டார் சைக்கிள் திருத்துமிடத்தில் நிறுத்தப்பட்டது. அங்கு மோட்டார் சைக்கிளை இயங்க செய்தபோது திடீரென தீப்பிடித்து எரிந்தது.

தீ பிடித்த மோட்டார் சைக்கிளில் இருந்து திருத்துமிடத்துக்கு தீ பிடித்த நிலையில் அங்கு நின்றவர்கள் தீயைக் கட்டுப்படுத்தினர்.

அதன்பின்னர் மோட்டார் சைக்கிள் மீதும் தண்ணீர் ஊற்றியும், மண் போட்டும் தீயைக் கட்டுப்படுத்த முயன்றனர். எனினும் மோட்டார் சைக்கிள் முழுமையாக தீயில் எரிந்தது.

அதேவேளை, வவுனியா நகர்ப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது. வீதியால் சென்றவர்களின் உதவியுடன் தீ அணைக்கப்பட்டது. ஆயினும் மோட்டார் சைக்கிள், தீயில் எரிந்து பகுதியளவில் சேதமாகியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-14,18)

# நாவலர் நினைவு மலர் வெளியீடும், கண்காட்சியும்

கொழும்பு, ஜன.2

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் 200ஆவது ஆண்டு நிறைவு விழாவும் நாவலரின் நூல்களின் கண்காட்சியும், நாவலர் நினைவு மலர் வெளியீடும் நேற்று முன்தினம் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றது.

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஓய்வுநிலை அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் இடம்பெற்ற பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து நாவலர் பெருமானின் திரு உருவச் சிலை சந்நிதியான் ஆச்சிரமத்துக்கு ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு நிகழ்வுகள் நடைபெற்றன. (எ-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

மண்ணில் 05 - 02 - 1940



விண்ணில் 12 - 12 - 2022

கடந்த 12.12.2022 திங்கட்கிழமை அன்று
சிவபதமடைந்த குடும்பத்தலைவி

## அமரர் நடராசா புஷ்பமணி

(முன்னாள் யாழ். போதனா வைத்தியசாலை
தாதிய பயிற்சி கல்லூரி விடுதி மேலாளர்)

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (03.01.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஞான வைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

குடும்பத்தினர்

(CS22476) (2.6)

# மரண அறிவித்தல்



## திருமதி சிவஞானம் செல்வராணி

நுணாவில் மத்தி சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவஞானம் செல்வராணி அவர்கள் (31.12.2022) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகராஜா கண்மனி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற அரியகுட்டி சிவஞானம் அவர்களின் அன்பு மனைவியும், சிவாஜினி (Norway) அவர்களின் பாசமிகு தாயாரும், சத்தியசீலனின் (Norway) அன்பு மாமியாரும், சற்குருராணி (UK), காலஞ்சென்ற தங்கராணி (UK), பாலராஜா (UK), பத்மராணி, விமலராணி (France), தர்மராணி (France) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற கந்தசாமி (France), சுகுமார் (UK), பவானி (UK), ராஜதுரை (UK), மனோகரன் (France), கரிகரன் (France) ஆகியோரின் அன்பு மைத்துனியும், சஜித், துர்க்கா (Norway) சஜிதா (Norway), சஜனுகா (Norway) ஆகியோரின் பேர்த்தியும், ஆரிஜனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2023) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியை களுக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.

(CS 48408) (3/6)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 12 . 1938



மறைவு 31 . 12 . 2022

## திருமதி திலகவதி இரத்தினசிங்கம்

(பதிவு பெற்ற ஓய்வுநிலை தாதிய உத்தியோகத்தர்)

சிறுப்பிட்டி கிழக்கு நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திலகவதி இரத்தினசிங்கம் அவர்கள் (31.12.2022) சனிக் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - ஆச்சிமுத்து தம்பதி யினரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - செல்லம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகளும், வைத்திலிங்கம் இரத்தினசிங்கம் (நுணாவில்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான இராசரத்தினம், மாசிலாமணி, பவளமணி, அருளம்பலம், செல்வரத்தினம், அரசரத்தினம் மற்றும் சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான யோகம்மா, தில்லைநாதன், காசிப் பிள்ளை மற்றும் ஞானபூபதி, ஜெயலக்சுமி, சிவக்கொழுந்து, காலஞ்சென்ற தனபாலன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், புஸ்பவதி கந்தையா, தனலட்சுமி இராஜசிங்கம், சாரதாதேவி, விஜயரட்ணம், விமலாதேவி ரவீந்திரன், இரஞ்சினி பரமநாதன், வசந்தி புஸ்பராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.01.2023) செவ்வாய்க் கிழமை சிறுப்பிட்டியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நண்பகல் 12.00 மணி யளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
077 691 3100, 021 205 4841

(CS 48409) (3/6)

தகவல்:
இரத்தினசிங்கம்
(கணவர்)


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 19.12.2022 திங்கட்கிழமை சிவனடி அடைந்த எமது அன்புத் தந்தை

அமரர்

## வைத்திய கலாநிதி இரத்தினசபாபதி பொன்னையா

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நாளை 03.01.2023 (செவ்வாய்க் கிழமை) காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரினது இல் லத்திலும் நடைபெற்று, 06.01.2023 அன்று (வெள்ளிக்கிழமை) 11.30 மணிய ளவில் நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்ட பத்தில் நடைபெறும்.



அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதமாக வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அத னைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளு மாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

05, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்
077 3304034

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரும் கடவுளரும்

தன் மீதான நம்பிக்கைகள் எல்லாமே அற்றுப்போன சந்தர்ப்பத்தில் தான் மனிதன் கடவுளை நினைக்கிறான். அந்தத் தருணத்தில் எல்லாமே கைமீறிப்போயிருக்கும். சிலவேளைகளில் அதற்குச் சற்று முந்திய கணங்களில் குறித்த மனிதன் ஏதாவது ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தால்கூட தப்பிப்பதற்கான அல்லது வேறு வழிகளை அடையக்கூடிய சாத்தியங்கள் இருந்திருக்கலாம். ஆனால், அந்தக் கணங்களைத் தவறவிட்டுவிட்டு, இனிமேல் என்னதான் செய்தாலும் எதுவும் ஆகப்போவதில்லை என்ற இறுதிக்கணத்தில் தான் 'கடவுளே காப்பாற்று!' என்று மனிதன் அலறத்தொடங்குகின்றான். 'அரசாங்கம் ஆரம்பித்துள் தீர்வுக்கான பேச்சு நல்லபடியாக நிறைவேறவேண்டும் என இந்தப் புத்தாண்டில் கடவுளை நான் பிரார்த்திக்கின்றேன்' என்று கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், கடவுளைத் துணைக்கழைப்பதை மேற்குறித்த வகையிலேயே நோக்கவேண்டியிருக்கிறது.


தமிழீழ விடுதலைப்புலிகளால், தமிழர்களுக்கான அரசியல் சக்தியாக உருவாக்கப்பட்டதே தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு. அதன் தலைமைப்பொறுப்பு புலிகள் இருக்கும் காலத்திலேயே சம்பந்தருக்கு வழங்கப்பட்டிருந்தது. சுமார் 20 வருடங்களுக்கும் மேலாக கூட்டமைப்பின் தலைவராக பொறுப்பில் இருக்கும் சம்பந்தர், இதுவரை தமிழர்களுக்கான தீர்வு முயற்சிகளில் ஆக்கபூர்வமாக எதைச் சாதித்தார் என்ற கேள்விக்கு விடை தேடுவது மிகக் கடினம். இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில் அமிர்தலிங்கத்துக்குப் பின்னர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த தமிழ்த்தலைவர் என்ற பெருமையையும், அதற்காக அரசாங்கம் அளித்த கொழும்பு இல்லத்தையும் தவிர, ஒரு பழுத்த, அனுபவம் மிக்க, தமிழர் பிரச்சினையை நீண்டகாலமாக நேரடியாகக் கண்டுணர்ந்த தலைவராக சம்பந்தரோ, அவர் தலைமையிலான கூட்டமைப்போ ஒரு கிள்ளுக்கீரையைக் கூட தமிழ் மக்களுக்கு பெற்றுக்கொடுத்திருக்கவில்லை. மாறாக புலிகளின் காலத்தில் உருவாக்கப்பட்ட 'தமிழ்க் கட்சிகளின் அரசியல் ஒற்றுமையை' இல்லாதாக்கி, பதவிக்காக பங்காளிகளை வெளியேற்றி, கூட்டமைப்பை சின்னாபின்னமாக்கி, தமிழரசுக் கட்சியை அல்லது அந்தக் கட்சியில் உள்ள ஒரு சிலரை மட்டும் தனிக்காட்டுராஜாவாக மாற்றியது மட்டுமே கூட்டமைப்பின் பணியாக இருந்திருக்கிறது. இதற்கான பொறுப்பை கூட்டமைப்பின் தலைவர் என்ற ரீதியில் சம்பந்தரே ஏற்கவேண்டும்.

நல்லாட்சிக்காலத்தில், நல்லாட்சி அரசின் பங்காளிகளான சுதந்திரக் கட்சியினர்கூட ரணிலோடு ஒருகட்டத்தில் மல்லுக்கட்டியபோதும்கூட, எதிர்க்கட்சியாக இருந்த கூட்டமைப்பு ரணிலுக்கு முடிவிலியாக 'முட்டுக் கொடுத்தபடியே' இருந்தது. அந்த முட்டுக்கொடுத்தலுக்கான ஒரு உதாரணமே 'அடுத்த தீபாவளிக்குள் தீர்வு' என்ற சம்பந்தரின் 'உலகப்புகழ் பெற்ற' மகாவாக்கியம். இப்படி நல்லாட்சி அரசாங்கத்தை வாழவைத்துவிட்டு, வெறுங்கையோடு இலங்கை புகுந்த இராவணேசன் போல, தமிழ் மக்கள் முன்னிலையில் அடுத்த தேர்தலின்போது நிறம் கரிந்திட, நிலம் விரல் கிளைந்திட நிற்கத் தான் முடிந்தது. இப்படி கூட்டமைப்பு செய்த கூத்துக்களாலேயே தமிழ் மக்கள் மாற்றுவழிகளை நாடவேண்டிய நிலை எழுந்தது. தமிழ் மக்களின் அரசியல்ரீதியான ஏகப்பிரதிநிதிகள் என்ற அடையாளத்தை கூட்டமைப்பு இழந்தது. அதனாலேயே முன்னரெல்லாம், தமிழ்மக்களின் தீர்வு தொடர்பில் கூட்டமைப்போடு மட்டுமே பேச்சுகளில் ஈடுபட்ட சிறிலங்கா அரசு, இப்போது சர்வகட்சிகளையும் கூட்டியிருக்கிறது.

இப்படிப்பட்ட நிலையில் , பழக்க தோசத்தில் 'அடுத்த தீபாவளிக்குள் தீர்வு' என்ற மகாவாக்கியத்தை பிரயோகித்தால், கடந்த தேர்தலில் கிடைத்த வாக்குகள்கூட இல்லாமற்போய்விடும் என்பது சம்பந்தருக்குப் புரிந்திருக்கவேண்டும். அதனாலேயே, 'அரசாங்கம் ஆரம்பித்துள் தீர்வுக்கான பேச்சு நல்லபடியாக நிறைவேறவேண்டும் என இந்தப் புத்தாண்டில் கடவுளை நான் பிரார்த்திக்கின்றேன்' என்று பழியைக் கடவுளின் தலையில் சுமத்திவிட சம்பந்தர் முனைகின்றார். அதாவது 'இனி எங்கள் கையில் எதுவுமில்லை, எல்லாம் கடவுளின் கையில்' என்று ஒரு சமய பிரசங்கியாகவே மாறிவிட்டார் சம்பந்தர். தந்தை செல்வாவும் 'இனிமேல் தமிழர்களைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்' -என்றார். ஆனால், அவர் எத்தனையோ பேச்சுகள், ஒப்பந்தங்கள் என்று தீர்வுக்கான எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு, அவை சிங்களத் தரப்பால் கிழித்தெறியப்பட்ட பின்னரே அப்படிக் கூறினார். தந்தை செல்வா சொன்னதில் ஒரு நியாயமும் இருந்தது, மக்களும் ஏற்றுகொண்டனர். ஆனால், எதுவுமே செய்யாமல், பேரின அரசுக்கு முட்டுக்கொடுத்துவிட்டு, 'தீர்வுக்காக கடவுளைப் பிரார்த்திக்கிறேன்' என்று சம்பந்தர் சொல்வதால், அவர் தந்தை செல்வாவாக மாறிவிடமுடியாது.

## நாளொரு நல்வார்த்தை

"நீ விரும்பாததை யார் சொன்னாலும் செய்யாதே..!
நீ விரும்புவதை உலகமே எதிர்த்து நின்றாலும் செய்து முடி..!"
– லெனின்




# தடைகளை அகற்றினாலே நிரந்தரத்தீர்வு சாத்தியம்!

## தயான் ஜயதிலக சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 2

தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வைக் காண்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முன்னெடுக்கப்படும் சர்வகட்சி மாநாட்டில் காணப்படுகின்ற தடைகளை நீக்க ஐந்து அம்சங்களை முன்வைத்து வலியுறுத்தியுள்ளார் கலாநிதி தயான் ஜயதிலக.

அவர் முன்வைத்த அம்சங்களில் தெரிவிக்கப்பட்டுள் எதாவது-

முதலாவதாக 13ஆவது திருத்தச்சட்டம் பற்றிய விவாதம் முடிவுறுத்தப்படவேண்டும் என்பதோடு, அதற்கமைவாக இறுதி நிலை ஒப்பந்தமானது உயர் நீதிமன்றத்தின் வரையறுக்கப்பட்ட காலப்பகுதியில் (15 ஆண்டுகள் வரை) முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற உத்தரவைப் பெற்றுக்கொள்ளவேண்டும். அதனூடாகவே, இனங்களுக்கு இடையிலான துருவ முனைப் படுத்தலின்றி முழுமையாக நடைமுறைச் சாத்தியமாக்க முடியும்.

இரண்டாவதாக, பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதாக இருந்தால் இந்தியாவையும் உள்ளீர்த்த கிரமமான அணுகுமுறை அவசியமாகின்றது.

மூன்றாவதாக, மாகாண சபைகள் தற்போதுள்ள நிலைமைகளை விடவும் மேலும் வினைத்திறனாகச் செயற்படுவதற்கு அனைத்துத் தரப்பினரும் இணங்குவதோடு அது பற்றிய விவாதங்கள் நீடித்துச் செல்லாது பூச்சியமாக்கப்பட வேண்டும்.

நான்காவதாக, பொறுப்புக்கூறல் தொடர்பாக டெஸ்மண்ட் டி சில்வாவின் அறிக்கையை செயற்படுத்தமுடியும். அதே நேரம், போர்க்கால பொறுப்புக்கூறல் தொடர்பிலான விடயங்களை படையினருக்கு பின்னடைவுகளை ஏற்படுத்தும் வகையில் முன்னெடுக்கக்கூடாது.

ஐந்தாவதாக, பிரஜைகளுக்கு இடையிலான பாகுபாடுகளை எதிர்க்கும் அதேநேரம், சமத்துவமான நிலைமைகளை ஏற்படுத்துவதற்காக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் - என்றுள்ளது. (எ-14-இ)

# அமெரிக்காவால் இலங்கைக்கு கடந்த வருடம் 240 மில். டொலர்

பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இலங்கைக்கு அமெரிக்கா கடந்த வருடம் 240 மில்லியன் டொலரை வழங்கியுள்ளது என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சாங் தெரிவித்தார்.

உணவுப் பாதுகாப்பு, பாடசாலை மதிய உணவுக்கான நிதி, சிறு விவசாயிகளுக்கான உரங்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இந்த உதவி ஒதுக்கப்பட்டுள்ளது.

சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு கடன், பயிற்சி மற்றும் ஆதரவு வழங்கவும் இலங்கை தயாராக உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

நாளை 03.01.2023 செவ்வாய்க்கிழமை மார்கழி 19
சுபநேரம் : 11.00 – 12.30
ராகுகாலம் : 03.30 – 05.00

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சியில் மூன்று நாள் டெங்கு களப்பரிசோதனைகள்!

சாவகச்சேரி, ஜன. 2

யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தால் நாளை 3ஆம் திகதி தொடக்கம் மூன்று தினங்கள் விசேட டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன் பிரகாரம் 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட மீசாலை கிழக்குப் பிரிவிலும், 4ஆம் திகதி புதன்கிழமை மட்டுவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட தென்மட்டுவில் கிராம அலுவலர் பிரிவிலும், 5ஆம் திகதி வியாழக்கிழமை நாவற்குழி, கைதடி, மட்டுவில், மந்துவில், வரணி, கொடிகாமம், எழுதுமட்டுவாழ், சாவகச்சேரி ஆகிய பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பிரிவுகளிலும் டெங்கு களப் பரிசோதனைகள் இடம்பெறும்.

இதன்படி, குடியிருப்புக்கள், அரச, தனியார் பாடசாலைகள், அரச தனியார் நிறுவனங்கள், தொழில் நிலையங்கள், நிர்மாணத்தளங்கள், வழிபாட்டுத்தலங்கள், பொது இடங்கள், முன்பள்ளிகள், தனியார் கல்வி நிறுவனங்கள், அரச, தனியார் மருத்துவமனைகள் போன்ற இடங்களில் டெங்கு களப் பரிசோதனைகள் இடம் பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-14,9)

# காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்துக்கு பாதயாத்திரை நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 2

அகில இலங்கை சைவ மகா சபையால் வருடாவருடம் மாதகல் சம்பில்துறை - சம்புநாத ஈஸ்வரத்திலிருந்து காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தை நோக்கி முன்னெடுக்கப்படும் பாதயாத்திரை 10ஆவது முறையாக நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

அதற்கமைய பாதயாத்திரை பயணிக்கும் வீதிகள் மற்றும் தரிசிக்கும் ஆலயங்களை மையப்படுத்தி விசேட அறிவித்தல் மற்றும் துண்டுப்பிரசுரங்களும் அகில இலங்கை சைவ மகாசபையின் சிவதொண்டர்களால் வழங்கப்பட்டது.

மாதகல் - சம்பில்துறை சம்புநாத ஈஸ்வரத்தில் ஆரம்பமாகும் பாதயாத்திரை சாந்தை சிதம்பரேஸ்வரர் ஆலயம், சாந்தை வீரபத்திரர் ஆலயம், பனிப்புலம் முத்துமாரியம்மன் ஆலயம், சுழிபுரம் பறாளாய் பிள்ளையார் மற்றும் முருகன் ஆலயங்கள், சுழிபுரம் மத்தி கறுத்தனாத்தோட்டம் துர்க்கையம்மன் ஆலயம், சுழிபுரம் மேற்கு ஹரிகர புத்திர ஐயனார் ஆலயம், சுழிபுரம் மேற்கு கதிர்வேலாயுத சுவாமிகள் ஆலயம், சுழிபுரம் பெரியபுலோ வைரவர் ஆலயம், மூளாய் வதிரன்புலோ பிள்ளையார், முருகன் ஆலயங்கள், மூளாய் இராவணேசுவரர் ஆலயம் ஆகியவற்றைத் தரிசித்து பொன்னாலை நாராயணன் தாகசாந்தி நிலையத்தினரின் அன்னதானத்தைத் தொடர்ந்து வலந்தலை மடத்துக்கரை முத்துமாரியம்மன் ஆலயம் முதலான திருத்தலங்களைத் தரிசித்தவாறு காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தை சென்றடையும் என்று அகில இலங்கை சைவ மகாசபை அறிவித்துள்ளது. (ம-14,125)

# ஆறுமுகநாவலர் ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், ஜன. 2

கைதடி கிழக்கு சனசமூக நிலைய இந்து வாலிபர் சங்கம் நடத்திய ஆறுமுகநாவலர் ஆண்டுவிழா, கைதடி கிழக்கு சனசமூக நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

அதன்போது நாவலரின் உருவப்படத்துக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. நாவலர் ஆண்டுவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து 'இன்றைய சமூகம் நாவலர் காட்டிய வழியில் பயணிக்கிறதா?, இல்லையா?' என்ற தொனிப் பொருளில் பட்டிமன்றமும், 'வள்ளி திருமணம்' இசைநாடகமும் இடம்பெற்றன. நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் சி.சிறிசற்குணராஜா, தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் ஆறு. திருமுருகன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ம-14,27)

# 2023 புத்தாண்டு ராசிபலன்

மார்கழி மாதம் 17ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை வளர்பிறை தசமி திதியில், சம நோக்குடைய அஸ்வினி நட்சத்திரம், மேடம் ராசி, கன்னி லக்னத்தில், சிவம் நாமயோகத்தில், தைத்துலம் நாமகரணத்தில், நள்ளிரவு 12.01 மணிக்கு 01.01.2023 ஆம் ஆண்டு பிறக்கிறது.

## மீனம்

உண்மைக்கு முக்கியத்துவம் கொடுப்பவர் நீங்கள். உங்களுக்கு லாப வீட்டில் சுக்கிரன் அமர்ந்திருக்கும் நேரத்தில் 2023 புத்தாண்டு பிறப்பதால், பணப்புழக்கம் அதிகரிக்கும். வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும்.

உங்கள் ராசிக்கு தனஸ்தானமான 2 ஆம் வீட்டில் சந்திரன் நிற்கும்போது புத்தாண்டு பிறப்பதால் பணவரவுக்குக் குறைவி ருக்காது. தடைப்பட்ட சுப நிகழ்ச்சிகள் இனி தடையின்றி நடந்தேறும்.

22.4.2023 வரை ஜன்ம குரு நீடிப்பதால் வேலை அதிகரிக்கும். வருங்காலத்தைப் பற்றிய பயம் வந்து நீங்கும். உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்துவார்கள். திடீர் பயணங்களும், செலவுகளும் இருக்கும்.

ராசிநாதனான குருபகவான் 23.4.2023 முதல் 2ம் வீட்டில் அமர்வதால் சோர்வு, களைப்பு நீங்கும். குடும்பத்தில் அமைதி திரும்பும். செலவுகள் இனி குறையும்.

8.10.2023 வரை உங்கள் ராசிக்கு 2ல் ராகுவும், 8ஆம் வீட்டில் கேதுவும் நிற்பதால் எதிலும் பிடிப்பற்றப் போக்கு, பிறர்மீது நம்பிக்கையின்மை, வீண் விரயம் வந்து செல்லும். 9.10.2023 முதல் வருடம் முடியும் வரை உங்கள் ராசிக்குள் ராகுவும், 7ல் கேதுவும் தொடர்வதால் எதிலும் ஒருவித பயம், படபடப்பு, ஒற்றைத் தலைவலி, செரிமானக் கோளாறு வந்து செல்லும். கணவன்-மனைவிக்குள் சிறு பிரச்சினைகளைப் பெரிதுப்படுத்த வேண்டாம்.

வருடத் தொடக்கத்தில் சனிபகவான் உங்கள் ராசிக்கு 11ம் வீட்டில் தொடர்வதால் திடீர் யோகம், பண வரவு உண்டாகும்.

29.3.2023 முதல் 23.8.2023 வரை சனிபகவான் அதிசாரத்தில் 12ம் வீடான கும்ப ராசியில் சென்று அமர்வதால் வீண் செலவுகள், கடன் பிரச்சினை வந்து செல்லும்.

வியாபாரிகளே! மே மாதம் முதல் லாபம் அதிகரிக்கும்.

உத்தியோகஸ்தர்களே! மே மாதம் முதல் உங்களின் திறமைக்கு மரியாதை உண்டாகும். அதிகாரிகளின் நம்பிக்கையைப் பெறுவீர்கள்.

**மொத்தத்தில் இந்தப் புத்தாண்டு மன நிம்மதியையும் வசதி வாய்ப்புகளையும் பெற்றுத் தருவதாக அமையும்.**

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும் போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். காரிய அனுகூலம் உண்டாகும். தாயிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிறு சிறு சங்கடங்கள், வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மனதுக்கு உற்சாகம் கிடைக்கும். லாபம் அதிகரிக்கும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துவிடுவது நல்லது. உறவினர்களால் செலவுகள் ஏற்படும் ஆதாயம் உண்டாகும். மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும்.

**சிம்மம்:** எதிலும் நிதானத்துடன் செயற்படவும். புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். அனுசரித்துச் செல்வது நல்லது. எதிர்பாராத செலவுகள் ஏற்படும்.

**கன்னி:** புதிய முயற்சிகளை மேற்கொள்வது நல்லது. எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வியாபாரத்தில் போட்டியாளர்களின் தொல்லைகளைச் சமாளிப்பீர்கள்.

**துலாம்:** எதிர்பார்க்கும் காரியம் சாதகமாக முடியும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் ஏற்பட்ட சங்கடங்கள் நீங்கும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்** : புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைக்கும்.

**தனுசு:** காரியங்கள் இழுபறியாகி முடியும். சிலருக்கு எதிர்பாராத பண வரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**மகரம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். அதேநேரம் செலவுகளும் அதிகரிக்கும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் முடிவது இழுபறியாகும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்ப விஷயமாக சற்று அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**மீனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்த்து விடவும். வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். எதிர்பாராத செலவுகள் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 04 - 01 - 1963 | 31 - 12 - 2022 |

## திருமதி புவனேந்திரன் அனுசியா

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட புவனேந்திரன் அனுசியா 31.12.2022 சனிக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பார்வதி அம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ரட்ணசபாபதி பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், புவனேந்திரன் அவர்களின் அன்பு மனைவியும், தக்சாயினி, கோசயன் ஆகியோரின் அன்புத் தாயாரும, சுகந்தா (இலங்கை), வசந்தி (ஜேர்மனி), ஜெயந்தி (கனடா), செல்வரூபன் (கனடா), ஜெயரூபி (கனடா), கிரிஜா (ஜேர்மனி), சிறிபவானி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெகதீஸ்வரன் (இலங்கை), கனேஸ்வரன் (ஜேர்மனி), சுதர்சன் (கனடா), புவனேஸ்வரி (கனடா), சரவணபவான் (கனடா), ரவிதாஸ் (ஜேர்மனி) முரளிதரன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஜெகதீஸ்வரன் சுகந்தா (இலங்கை)
077 662 7774, 077 712 9998
(துளசி மாடம்)
'ஜெனா மகால்'
44,7/ A, தாவடி கொக்குவில்.

தொடர்பு:
புவனேந்திரன் (ஜேர்மனி)
004 9177 6688 756

(CS 22468) (3/6)

# பதின்மூன்றாவது ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 25.12.1935 | 07.01.2009 |

## அமரர் ஆண்டி முருகையா

**திதி : சுவர்க்கவாயில் ஏகாதசி**

சொர்க்கத்தில் அமர்ந்து விட்டீர்கள்
ஆனால் நம் சோகமோ ஆறவில்லை ஐயா
ஆறுதல் அளித்து இரட்சியுங்கள் எம்மை
தெய்வமாக இருந்து எம்மை நல்வழிப்படுத்தி
ஆசீர்வதியுங்கள்.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

தியேட்டர் லேன்,
இணுவில் கிழக்கு.

(CS 48383 ) (3/6)

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் இராமச்சந்திரன் சிவகுமார்
(சிவா / மைந்தன்)

**திதி : பூர்வபக்க ஏகாதசி**

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 06.08.1971 | 24.12.2012 |

தெய்வத்தேவனே தேயாத வானிலவே!
தேடிப் புலம்புகின்றோம் தேம்பி அழுகின்றோம்
சேர்ந்து மகிழ்ந்திருந்த செய்தி எல்லாம் மறந்திடுமோ...
உன் வார்த்தைகளைத் தேடுகின்றோம்.
வாஞ்சைக்குரியவனே....

செல்வமகராசாவே உன் மாளிகை வெறுமையாக
சோர்ந்துவிட்டோம் நாம் சொல்லியழ வார்த்தையின்றி
நீயற்ற வாழ்வு நீண்ட துன்ப காலம் ஐயா - நாம்
நிம்மதி இழந்தோம் நீண்ட தூரம் போனதெங்கே?
பாசமுடன் நீ வளர்த்த ஆசைமகள் வளர்ந்து - உன்
வழிகாட்டலின்றி வாடி நிற்கின்றாள்
எல்லாம் இருந்தும் ஏதும் அற்றவர்களாக
ஏங்கித் தவிக்கின்றோம் எங்கு ஐயா சென்றுவிட்டாய்!
பாசமானவனே நீ ஓடி மறைந்து இன்றுடன்
பத்து ஆண்டுகள் சென்றதையா
பரிதவிக்கும் அம்மா, மனைவி, பிள்ளை உன்
உடன் பிறப்புக்கள் உறவுகள் எல்லாம்
உன்னைக் காணாது ஏங்கித் தவிக்கின்றார்கள்
எப்போ நீ வருவாய் ஐயா!

உன் ஆத்ம சாந்திக்காக அனுதினம் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி... ஓம் சாந்தி... ஓம் சாந்தி...

12/02, தொட்டியடி, விசுவமடு. குடும்பத்தினர்

(ANK CS 1222)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 30.04.1962

உதிர்வு 13.01.2022

யாழ். அரியாலையைப் பிறப்பிடமாகவும் அல்வாயை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் மாசிலாமணி சிறிதரன் (தேவன்)

(ஊழியர் - யாழ். மாநகர சபை)

திதி: வைகுண்ட ஏகாதசி (02.01.2023)

ஆண்டு ஒன்று ஆனபோதும் ஆறவில்லை எம்துயரம்
எங்கள் வாழ்வதனில் அன்புக் கணவராக,
பாசமுள்ள அப்பாவாக, ஆருயிர் சகோதரராக
உறவுகளின் நேசத்திற்குரியவராக சீருடன் வாழ்ந்து
சிவனடி சேர்ந்த உங்களது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உங்கள் நினைவுகளுடன்**
**மனைவி, பிள்ளைகள், சகோதரிகள்.**

(CS 222636) (3/6)

## சேவை நலன் பாராட்டு



### திருமதி சத்தியவதனா சிவனேசநாதன் (S.L.T.S.-I) (பகுதித் தலைவர் - ஆரம்பப்பிரிவு)

Congratulations

எமது பாடசாலையில் கடமையாற்றி 31.12.2022 இல் ஓய்வுபெறும் திருமதி சத்தியவதனா சிவனேசநாதன் (பகுதித் தலைவர் - ஆரம்பப் பிரிவு) அவர்களைப் பாராட்டுவதுடன் ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய வாழ்த்துகிறோம்.

**சேவை விபரம்**

- யா/ சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி - 22.03.1990 - 18.02.2010
- யா/ St ஆன்ஸ் றோ.க (மானிப்பாய்) - 18.12.2010 - 02.01.2019
- யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி - 02.01.2019 - 31.12.2022

பாராட்டி வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
**யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி**

## பாராட்டி வாழ்துகின்றோம்



### திருமதி தர்ஷனி மதிவதன்

(தேசிய கற்பித்தலில் டிப்ளோமா- ஆரம்பப்பிரிவு)
(கல்விமாணி - B.ED)

கொழும்பு (BMICH இல் **28.12.2022** அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் **கல்விமாணிப்பட்டத்தை** (B.ED) பெற்றுக் கொண்ட எமது பாடசாலை ஆசிரியை திருமதி தர்ஷனி மதிவதன் அவர்களை பாராட்டி வாழ்த்துவதோடு, இவர் மேன். மேலும் பல பட்டங்களைப் பெற்று உயர்ச்சி பெற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிக்கழகம்
**யா/ கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம்**

(cs48405) (2.6)

## மக்கள் வங்கி ஏ.ரி.எம்.களில் பெருந்தொகைப் பணம் திருட்டு

நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள மக்கள் வங்கி கிளைகளின் ஏ.ரி.எம். இயந்திரங்களில் பெருந்தொகைப் பணம் திருடப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை ஹிக்கடுவை, காலி, பத்தேகம ஆகிய நகரங்களில் உள்ள மக்கள் வங்கி ஏ.ரி.எம். இயந்திரங்களிலிருந்து பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

ஏ.ரி.எம். இயந்திரங்களுக்கருகில் வருகை தந்த வெளிநாட்டவர்கள் என சந்தேகிக்கப்படும் பிரஜைகளால், அங்கு காணப்பட்ட சி.சி.ரி.வி. கமராக்கள் செயலிழக்கச் செய்யப்பட்டு, ஏ.ரி.எம். இயந்திர தரவுகளை மாற்றி பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது என்று ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இந்த மூன்று பிரதேசங்களிலும் ஒரே முறையில் பணம் கொள்ளையிடப்பட்டுள்ளமையால், ஒரே தரப்பினரே அனைத்து கொள்ளையுடனும் தொடர்புபட்டுள்ளனர் என்று சந்தேகிக்கப்படுகிறது. அதை அடிப்படையாகக் கொண்டு ஹிக்கடுவை, காலி, பத்தேகம உள்ளிட்ட பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

(ம-14-இ)

## மரண அறிவித்தல்



பிறப்பு 01 - 01 - 1937

இறப்பு 30 - 12 - 2022

### நாகலிங்கம் அன்னம்மா

ஊரங்குணை கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் பிரம்படியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் அன்னம்மா 30.12.2022 வெள்ளிகிழமை காலமானார்.

அன்னார் காஞ்சென்றவர்களான இளையதம்பி, முத்துப்பிள்ளை தம்பதியரின் இளை மகளும், காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி, சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற நாகலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற விக்கினேஸ்வரமூர்த்தி மற்றும் அரியமலர், ரவீந்திரன், அன்னலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற மகாலிங்கசிவம் மற்றும் கமலாவதி, அகிலா ஆகியோரின் அன்பு மாமியாரும், மாதவன், மதுரனின் அம்மம்மாவும், அகிலேஸ், அபிதாஸ், அச்சயன், அபிசன், அனுஸ்கா, அஜானி ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, வல்லிபுரம், இலட்சுமி, செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.01.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**79, பிரம்படி வீதி,**
**கொக்குவில்.**
**076 908 6692**

தகவல்:
குடும்பத்தினர்

(CS 22468) (3/6)

## 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 10 . 11 . 1944



மறைவு 03 . 12 . 2022

கடந்த (03.12.2022) சனிக்கிழமை ஏகாதசி திதியில் சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

### அமரர் பவளக்கொடி நாகநாதன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த (31.12.2022) சனிக்கிழமை காலை 5 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (02.01.2023) திங்கட்கிழமை மு.ப 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அவரின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து உதவியோருக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டு பல்வேறு வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தினர் சார்பில் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)**

**மீசாலை வடக்கு.**
**கொடிகாமம்.**

(Cr 38929) (3/6)

**குடும்பத்தினர்**
**076 358 1627**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர்ந்திருக்கும் இப்புத்தாண்டில் புது அடி எடுத்து வைப்போம்...




நாம் ஒன்றிணைந்து புதியதொரு நாளை உருவாக்குவோம்.

ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் இன் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

Company Registration Number - PB 289

Sri Lanka Insurance

www.srilankainsurance.com

மேலதிக தகவல்களுக்கு உங்கள் காப்புறுதி ஆலோசகர் அல்லது

0112 357 357

SLIC
ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ்
தந்தையும் தாயும் போன்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு:
12.02.1987

உதிர்வு:
31.12.2022



## திருமதி துஸ்ஸாரா கண்ணதாசன்

டச்சு வீதி, வீமன்காமம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கப்பம்புலம், சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துஸ்ஸாரா கண்ணதாசன் அவர்கள் 31.12.2022 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் சந்திரகாந்தியம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும் கண்ணதாசன் (சுவிஸ்) அவர்களின் அருமை மனைவியும் ரனுஜாவின் (யா/ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை) பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.01.2023) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கப்பம்புலம், சுன்னாகம்**
**தொ.பே.இல: 077 72 38478**
**077 8860049**

**தகவல்:குடும்பத்தினர்**

# ஜனவரி மாத இறுதிக்குள் அமைச்சரவை மாற்றம்

கொழும்பு, ஜன. 2

ஜனவரி மாத இறுதிக்குள் அமைச்சரவையில் மாற்றம் செய்யப்படவுள்ளது என்று அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஜனாதிபதி மற்றும் பிரதமரின் இணக்கப்பாட்டுடன் இந்த அமைச்சரவைத் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

புதிதாக 12 அமைச்சரவை அமைச்சர்களை நியமிக்க முன்மொழியப்பட்டுள்ளதுடன், பொதுஜன பெரமுனவின் நிறுவுநர் பஸில் ராஜபக்சவால் முன்மொழியப்பட்ட அமைச்சரவையின் மூத்த உறுப்பினர்களுக்கு மேலும் அமைச்சுப் பதவிகளை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக வஜிர அபேவர்த்தன மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குவதற்கு இணக்கம் ஏற்பட்டுள்ளது என்று உள்ளக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆரம்ப கட்ட நடவடிக்கைகளின் கீழ் 6 ஆளுநர்களை நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும், வடமேற்கு மற்றும் மத்திய மேல் மாகாண ஆளுநர்களை நியமிக்க ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது எனவும் அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(எ-14-இ)


**வாகனம் விற்பனைக்கு**

Wagon R, FZ, Premium, 2019, done 30,000km, Imported brand New, White, Doctor owned, Service records, Caralog Book, Pushstart, Dunlop Tyres (2new) 2nd owner, 5,85 Million. (ACO 21741) (3/6)

தொடர்புகளுக்கு:
077 492 7947, 076 036 0923


# மரண அறிவித்தல்

## அருணாசலம் குணபாலசிங்கம்

(வலி.வடக்கு மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வு சங்கத் தலைவர்)



திருப்பூர் மயிலிட்டியை பிறப்பிடமாகவும் கதிரிப்பாய், மயிலிட்டியை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் குணபாலசிங்கம் அவர்கள் (31.12.2022) சனிக்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - தங்கம்மா ஆகியோரின் பாசமிகு மகனும் நல்லையா- வள்ளியம்மா ஆகியோரின் மருமகனும் ஆவார். அமரர் உருத்திராட்சரூபவதி (தேவி) அவர்களின் பாசமிகு கணவரும் அமரர் தவமணி (இரத்தினம்), உருக்குமணி மற்றும் சதாசிவம் (சித்தப்பா) ஆகியோரின் சகோதரரும் அமரர்களான அருண், அருண்ரமேஸ் மற்றும் அருண்குமார், அருண்மதி ஆகியோரின் பாசமிகு தந்தையும் கயல்விழி, சப்ரினா, அமரர் கண்ணன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் இந்திரலிங்கம், சுந்தரலிங்கம், கணேசலிங்கம், பரமலிங்கம், இரத்தினலிங்கம், குலரூபவதி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் பிரியா, பிருந்தா, பிரவின், தேவிசூரியா (கௌசி), ஊகோ, அலெக்ஷி ஆகியோரின் பாசமிகு பேரனும் கார்த்தியின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் திருவுடல் திருப்பூர் மயிலிட்டியில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**தொடர்புகளுக்கு:**
**077 2405556 (மகள் அருள்மதி)**
**077 314 4883**

**தகவல்: குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

## அழகரத்தினம் சுபாஸ்கரன்

**(ஓய்வுநிலை ஆசிரியர்- யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி**



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அழகரத்தினம் சுபாஸ்கரன் அவர்கள் 01.01.2023 அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இந்துமதி மற்றும் மகாலக்ஷ்மி ஆகியோரின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான அழகரத்தினம் பரமேஸ்வரி ஆகியோரின் ஏகபுத்திரனும் இளைய தம்பி கனேஸ்வரி மற்றும் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் மகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மருமகனும் தாசுரன் (பொறியியலாளர்- லண்டன்), ரஜீவன் (உதவி முகாமையாளர் - அரச ஈட்டு முதலீட்டு வங்கி), ராதை (லண்டன்), சாலவன் (பொறியியலாளர் - சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் துஷ்யந்தி (Software Engineer லண்டன்), இமையாயினி (People's leasing -Jaffna), பகீரதன் (லண்டன்), வினோதினி (விரிவுரையாளர்- பொறியியல் பீடம்- யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் லோஜிதன், பவித்திரா, வைசாலி, மிர்னாலி, கவின், நதீனா, ராகவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஸ்ரீமதி, பொன்னம்பலம், கருணாகரன், ஈசன் , காலஞ்சென்ற மாயவன் மற்றும் தெய்வேந்திரன், லோகேந்திரன், மனோராஜினி, காலஞ்சென்ற ரவீந்திரன் மற்றும் மனோபத்மினி, மனோரஞ்சினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (03.01.2023) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

பிறப்பு
17 - 01 - 1932



இறப்பு
01 - 01 - 2023

## திரு. சின்னத்தம்பி விசுவலிங்கம்

கச்சாய் தெற்கு கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சின்னத்தம்பி விசுவலிங்கம் அவர்கள் நேற்று (01.01.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னம்பலம் நாகமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும் சேதுப்பிள்ளையின் அன்புக் கணவரும், சின்னையா (அமரர்), காசிப்பிள்ளை (அமரர்), சங்கரப்பிள்ளை (அமரர்), முத்துப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் நடராசா, செல்லப்பா, கந்தசாமி, தங்கம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும் கண்மணி, தவமணி (அமரர்), சிவமணி, சக்திவேல், ஜெயமணி ஆகியோரின் அன்புத் தந்தையும் குலராசசிங்கம், ஸ்ரீகாந்தா, மகேந்திரம் (அமரர்), துஷந்தி, சிவலோகநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் யாழினி, கௌசல்யா, அச்சுதன், சரண்ணியா, வினோபவன், டிலோசா, சாரங்கி, அபிரங்கி, தாரகா, நர்த்திகா, ஆரங்கா ஆகியோரின் அன்புப் பேரனும் சயானா, சாதனா, மதுசிகா, ஆஷகா, லக்ஸ்மிகா, அக்ஷயன், அக்ஷரன், கிஸ்வின், கனிஸ்கா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் **நாளை (03.01.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில்** அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எறியால்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 614 1289**

(CS 22468) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2000 சதவீதத்தால்...

சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் புத்தாண்டு நாளான நேற்று நடத்திய விசேட ஊடக சந்திப்பில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நுகர்வோருக்கு 0 முதல் 30 அலகுகள் வரை மின்சாரக் கட்டணத்தை 2 ஆயிரம் சதவீதத்தால் அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2003 ஆம் ஆண்டிலேயே மின்சாரக் கட்டணத்தை 30 சதவீதம் வரை அதிகரிக்க முன்மொழியப்பட்டது. இலங்கையில் 90 அலகுக்கும் குறைவான மின் அலகுகளைப் பயன்படுத்துபவர்கள் சுமார் 50 இலட்சம் பேர் உள்ளனர். குறைந்த வருமானம் பெறும் நுகர்வோர் இவர்கள் தான். அவர்களின் மின்கட்டணம் இவ்வாறு உயர்த்தப்பட்டால் இந்த சிரமங்களுக்கு மத்தியில் இந்த மின்கட்டணத்தை அவர்களால் செலுத்த முடியாது என்பதை அறிவோம்.

0-30 க்கு இடையில், அதாவது 31-60க்கும் இடையில் 120 அலகுகளுக்குக் குறைவாகப் பயன்படுத்தும் அனைத்து நுகர்வோரிடமிருந்தும் சுமார் 80 பில்லியன் கூடுதல் வருமானத்தைப் பெறுவதற்காக இந்த முன்மொழிவு முன்வைக்கப்பட்டுள்ளது. இது ஒரு நியாயமற்ற திட்டம். இலங்கை மின்சாரசபை இந்த மாதம் உட்பட கடந்த 4 மாதங்களாக வருமானம் ஈட்டி வருகிறது - என்றார். (அ-ஒ-இ)

## தமிழ்த்...

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்துக்கு முன்னதாக இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்படும் என்று நம்பகரமாகத் தெரியவருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நிர்வாக ரீதியாக வலுப்படுத்தவேண்டும் என்ற கோரிக்கையும் இந்தக் கடிதத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான பொதுச் சின்னம் மற்றும் கட்சிப் பதிவு தொடர்பிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்து - ஓரணியாக - கூட்டமைப்பை விரிவுபடுத்தி பயணிக்கவேண்டும் என்றும் அதற்கான அனைத்து முயற்சிகளையும் எடுக்கவேண்டும் எனவும் அந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் மோடிக்கு அனுப்பிய கடிதம், ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்பிய கடிதம், ரணில் அரசாங்கத்தின் சர்வகட்சி கூட்டத்தில் நிலைப்பாடு எடுக்கும் விவகாரம் என அனைத்து விடயங்களிலும் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒற்றுமையாகச் செயற்பட்டுள்ள நிலையில் அதனை தொடர்ந்து ஒன்றித்து - ஓரணியாக - ஒரே கூட்டமைப்பாகக் கொண்டு செல்லவேண்டியதன் தேவைப்பாடு குறித்தும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் உருவாக்கப்படும் கூட்டு தனித்து தேர்தலுக்காக மாத்திரம் இல்லாமல் தொடர்ந்தும் அது அவ்வாறாகச் செயற்படவேண்டும் எனவும் கடிதத்தில் சுட்டிக்காட்டப்படுள்ளதாகத் தெரியவருகின்றது. (அ-ஒ-5)

## கலண்டர்கள்,...

பட்ட ஆண்டாக இந்த ஆண்டு அமைந்துள்ளது என்று கலண்டர் மற்றும் டயரி என்பவற்றை அச்சிடுவோர் கூறுகின்றனர்.

முன்னைய ஆண்டுகளில், டயரிகள் மற்றும் கலண்டர்கள் வெவ்வேறான வடிவங்களில் வடிவமைக்கப்பட்டு அச்சிடப்பட்டு அதிக எண்ணிக்கையிலான பிரதிகள் பெறப்பட்டன. தற்போது நாட்டில் காகிதத் தட்டுப்பாடு மற்றும் அச்சிடப் பயன்படுத்தப்படும் மைகளின் விலை அதிகரிப்பால் கலண்டர்கள், டயரிகளை அச்சிடுவதற்கான ஈடுபாட்டை வர்த்தக நிறுவன உரிமையாளர்கள் காண்பிக்கவில்லை. கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் இவற்றை அச்சிடுவதற்கான செலவு ஐந்து மடங்கு அதிகரித்துள்ளது. மேலும் கலண்டர்கள், டயரிகள் அச்சிட்ட வர்த்தக நிறுவனங்கள் கூட கடந்தகாலங்களை விட குறைந்தளவிலேயே அவற்றை அச்சிட்டுள்ளன. பொது மற்றும் தனியார் வங்கிகள் ஒவ்வொரு ஆண்டும் தங்கள் வாடிக்கையாளர்களுக்கு இலவச கலண்டர்களை வழங்குகின்றன. இவை இந்த ஆண்டு இலத்திரனியல் கலண்டர்களை வடிவமைத்து சமூக ஊடகங்கள் ஊடாக வாடிக்கையாளர்களுக்கு அவற்றை அனுப்பியுள்ளன. (அ-ஒ-இ)

## போதைப்...

தெரியவந்துள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த

# மரண அறிவித்தல்

## விநாயகமூர்த்தி நடேசு

தோற்றம் 01.04.1935 மறைவு 31.12.2022



யாழ். அச்சுவேலி தெற்கு அச்சுவேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விநாயகமூர்த்தி நடேசு அவர்கள் நேற்றுமுன்தினம் (31.12.2022) சனிக்கிழமை காத்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி- செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் சரஸ்வதி அவர்களின் பாசமிகு கணவரும் கதிர்காமநாதன், பத்மநாதன், தவராணி ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் சுதர்சினி, கலைச்செல்வி, வாமதேவன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர் களான ரோசம்மா, கந்தசாமி, புஸ்பராணி மற்றும் ராணியம்மா, கதிரமலை, சுந்தரமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் மதுரா, மதுமினா, மிதுர்சா, டினேஸ், வித்தியா, விதுசன், நிதர்சன் ஆகியோரின் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை இன்று திங்கட்கிழமை (02.01.2023) காலை 10 மணியளவில் அன்னாரது அச்சுவேலி இல்லத்தில் நடைபெற்று ஆவரங்கால் கரதடி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி

தொடர்பு : தவராணி (மகள்) 0773998557

தகவல்: குடும்பத்தினர்

காலங்களைவிட உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனை இளம்சமூகத்தினர் மத்தியில் அதிகரித்துள்ளது. சில தரப்புக்கள் இளம் பெண்களை இலக்கு வைத்தும் இதனை விநியோகித்து வந்துள்ளன. அவ்வாறு உயிர்கொல்லிப் போதைப்பொருளுக்கு அடிமையான இளம் பெண்கள், அவற்றைத் தொடர்ந்து கொள்வனவு செய்வதற்காக பாலியல் துர்நடத்தைகளில் ஈடுபட்டுள்ளனர். யாழ். மாவட்டத்தில் கடந்த ஆண்டு 7 பெண்கள் இவ்வாறு கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. 'உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனையை ஒழிக்கவேண்டும் என்பதுடன், இவ்வாறான கலாசாரப் பிறழ்வுகளை ஆரம்பத்திலேயே தடுக்கவேண்டும்' என்று சமூகஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர். (அ-ஒ-5)

## புத்தாண்டை...

கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக 2021 மற்றும் 2022ஆம் ஆண்டை நள்ளிரவில் வரவேற்கும் பிரமாண்டமான கொண்டாட்டங்கள் எவையும் இடம்பெறவில்லை. இந்த நிலையில் 2023ஆம் ஆண்டை வரவேற்கும் நிகழ்வுகள் வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் களைகட்டியிருந்தன. இசை நிகழ்வுகள், கொண்டாட்டங்கள், கேளிக்கைகள், களியாட்டங்கள் என்று பல தரப்பட்ட நிகழ்வுகள் ஹோட்டல்கள் மற்றும் பொது இடங்களில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன. நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12 மணிக்கு வாணவேடிக்கைகளுடன் பட்டாசு கொளுத்தி புத்தாண்டை மக்கள் வரவேற்றனர்.

அதேநேரம், தேவாலயங்களில் நள்ளிரவு ஆராதனையில் பெருமளவு மக்கள் கலந்து கொண்டிருந்தனர். நேற்றுக் காலை இந்துக்கள் ஆலயங்களில் வழிபாடுகளில் பெருமளவில் பங்கேற்றதைக்காண முடிந்தது. அத்துடன் புதிய ஆடைகளுடன் ஹோட்டல்கள் மற்றும் பொழுதுபோக்கு இடங்களில் நேற்று மாலை அதிகளவானோர் திரண்டிருந்து புத்தாண்டுக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர். (அ-ஒ-5)

## குடும்பத்தலை...

4 மணியளவில் கொலை செய்யப்பட்டுள்ளார். வீடு புகுந்த கும்பல் கத்தியால் குத்தியும், பலமாகத் தாக்கியும் உள்ளது. படுகாயமடைந்த அவரை அயலர்கள் மருத்துவமனையில் சேர்த்தனர். ஆனால், அவர் கொண்டு செல்லும் வழியிலேயே உயிரிழந்துவிட்டார். தாக்குதல் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். அவர்களது முதற் கட்ட விசாரணைகளில் செல்வா நகரைச் சேர்ந்த கும்பல் ஒன்றே இந்தக் கொலையைச் செய்ததாக சந்தேகிக்கின்றனர். அந்தக் குழுவைச் சேர்ந்த ஒருவரின் உறவினரை, மதுபான விடுதியில் வைத்து கொல்லப்பட்டவரின் குழுவினர் சில நாள்களுக்கு முன்னர் தாக்கி தலையில் காயம் ஏற்படுத்தினர் எனவும், அதற்கு பழிவாங்கவே இந்தத் தாக்குதல் - கொலை - இடம்பெற்றிருப்பதாக தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிடுகின்றனர். கொலைச் சந்தேகநபர்கள் நேற்று இரவு வரையில் கைது செய்யப்படவில்லை. (அ-ஒ-5-214)

## போதைக்கு...

ஆண்டுகளை விட பலமடங்கு அதிகம் என்று மருத்துவத்துறை வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மாத்திரமே 742 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 20 தொடக்கம் 25 வயதுக்கு உட்பட்ட வயதுப் பிரிவினரே அதிகம்.

இவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்களில் அதிகமானவர்கள் உயிர்கொல்லி ஹெரோய்னுக்கு அடிமையானவர்கள். இவர்களில் உயிர்கொல்லி ஐஸ் மற்றும் கஞ்சாவுக்கு அடிமையானவர்களும் உள்ளனர். இவை மூன்றையும் பயன்படுத்துபவர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவ்வாறு போதைப்பொருள் பாவனையாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களில் அதிகமானவர்கள் மூக்கு மூலமாக நுகர்கின்றனர். அதற்கு அடுத்தபடியாக ஊசி மூலம் அதனை நுகர்கின்றனர். உயிர்கொல்லிப் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு நுரையீரல் அழற்சி ஏற்பட்டு உயிரிழக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இதுவரை யாழ். மாவட்டத்தில் 15 பேர் உயிரிழந்தமை நினைவில்கொள்ளத்தக்கது. (அ-ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### புத்தாண்டு ஆராதனைக்கு

# பக்தர்களை ஏற்றிச்சென்ற பேருந்து மீது தாக்குதல்

### 4 பேரை தேடும் பொலிஸார்

சுழிபுரம் - பாண்டவெட்டை பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்தில் உள்ள தேவாலயத்துக்கு பக்தர்களை ஏற்றிச் சென்ற பேருந்து மீது நேற்றுமுன்தினம் நள்ளிரவு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சுழிபுரம் இராணுவக் காவலரணுக்கு அண்மையில் வைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

பேருந்தில் பயணித்த இருவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். பேருந்தின் கண்ணாடிகள் அடித்து நொருக்கப்பட்டது.

பேருந்து பயணித்த சில நிமிடங்களில் அதனை வாகனம் ஒன்றில் 4 பேர் துரத்தி வந்துள்ளனர். அவர்கள் சுழிபுரம் இராணுவக் காவலரணுக்கு அண்மையாக பேருந்தை மறித்து தாக்குதலை நடத்தியுள்ளனர். பேருந்தில் இருந்தவர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பேருந்தின் கண்ணாடிகளை பொல்லுகளால் அடித்து உடைத்துள்ளனர். பேருந்தில் இருந்தவர்கள் அபயக்குரல் எழுப்பினர். அருகிலிருந்த இராணுவ முகாமைச் சேர்ந்த சிப்பாய்கள் அங்கு சென்றும் நிலைமையை ஓரளவுக்கு கட்டுப்படுத்தினர். பின்னர் விசேட அதிரடிப் படையினர் அங்கு களமிறக்கப்பட்ட பின்னரே நிலைமை முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் 4 பேரும் தலைமறைவாகியுள்ளதாகவும் அவர்களைத் தேடி வருவதாகவும் வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர். (அ-ஒ-5-27-125)

### பிணையில் வெளியேவந்த

# கஞ்சிப்பானை இம்ரான் 'கம்பி நீட்டினார்'

### தமிழகத்துக்குள் நுழைவாம்

திட்டமிட்ட குற்றக் கும்பல் மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர்களின் தலைவன் என அழைக்கப்படும் 'கஞ்சிப்பானை இம்ரான்' எனும் முகமது நஜீம் முகமது இம்ரான் இலங்கையிலிருந்து தமிழகத்துக்குள் நுழைந்ததாக 'த இந்து' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

கிறிஸ்மஸ் நாள் அன்று இராமேஸ்வரம் – இராமநாதபுரம் மாவட்ட கடற்கரையில் கஞ்சிப்பானை இம்ரானும் அவரது சகாவும் இறங்கியதாகவும், இது தொடர்பாக அவதானமாக இருக்குமாறு தமிழகம் முழுவதும் உள்ள மூத்த பொலிஸ் அதிகாரிகளை உளவுத்துறை எச்சரித்துள்ளதாகவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொலை, கொலை அச்சுறுத்தல் விடுத்தமை உள்ளிட்ட பல்வேறு குற்றங்களுக்காக தேடப்பட்டு வந்த இம்ரான், கடந்த 2019ஆம் ஆண்டு டுபாயில் கைது செய்யப்பட்டு, நாடு கடத்தப்பட்டு, தலா 5 மில்லியன் ரூபா மதிப்பிலான இரண்டு ஆள் பிணைகளில் கடந்த 20ஆம் திகதி நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டார்.

பிணையில் வெளிவந்த இம்ரான் இந்தியாவுக்குள் நுழையத் திட்டமிட்டுள்ளதாக உளவு அமைப்புகள் மற்றும் நம்பகமான ஆதாரங்களில் இருந்து தமிழக உளவுத்துறைக்கு தகவல் கிடைத்துள்ளதாக த இந்து தெரிவித்துள்ளது.

கஞ்சிப்பானை இம்ரான் இந்தியாவுக்குத் தப்பிச் சென்றது குறித்து இலங்கை ... னும் குறிப்பிட்ட ... லை அளிக்க வில்லை என்றும், இந்தியப் புலனாய்வு அமைப்புகள் கஞ்சிப்பானை இம்ரான் தங்கள் நாட்டுக்குள் நுழைந்தமை குறித்த உண்மைகளை நம்பகமான ஆதாரங்கள் மூலம் உறுதி செய்துள்ளதாகவும் 'த இந்து' சுட்டிக்காட்டுகிறது. (அ-ஒ-இ)

### 10 வயதுச்...

களால் நையப்புடைக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

அந்தப் பகுதியிலுள்ள பலசரக்கு கடைக்கு பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு 10 வயதுச் சிறுமி தனியாக வந்துள்ளார். கடையில் வேறு எவரும் இல்லாத நிலையில், கடையினுள் சிறுமியைத் தள்ளி பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொள்வதற்கு 72 வயது முதியவர் முயற்சித்துள்ளார்.

அந்த நேரம் அந்தப் பகுதியால் சென்ற இளைஞர்கள், சிறுமியின் சத்தம் கேட்டு கடையினுள் சென்று பார்த்தபோது துஷ்பிரயோக முயற்சி தெரியவந்துள்ளது. இதனையடுத்து முதியவரை இளைஞர்கள் 'முறையாகக் கவனித்துள்ளனர்'. அதன் பின்னர் மானிப்பாய் பொலிஸாரிடம் அவர் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

(அ-ஒ-125)

### பட்டாசு...

'வாடிக்கையாளர்கள் நிற்பதால் எதனையும் செய்து விடாதீர்கள்' என வர்த்தக நிலைய உரிமையாளர் கெஞ்சிய போதிலும், அதனைப்பொருட்படுத்தாது நிறைவெறியில் நின்ற கும்பல் பட்டாசுகளைக் கொளுத்தியதால் மக்கள் நாலா திசைக்கும் சிதறி ஓடியுள்ளனர். பட்டாசுகள் வெடித்தமையால் கடையில் பொருள்கள் வைக்கப்பட்டிருந்த முன்பகுதி சிறியளவில் சேதமடைந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(அ-ஒ-18)

**பணிப்பெண் தேவை**

கோண்டாவில் பகுதியில்
வீட்டுவேலை செய்வதற்கு
பணிப்பெண் தேவை.
தொடர்பு: 077 261 9386

**வேலைக்கு ஆள் தேவை**

நெல்லியடிப் பகுதியில் அமையவுள்ள
உணவகம் ஒன்றுக்கு றொட்டி வேலை,
றைஸ் அடிக்க, சைனீஸ் றைஸ் செய்யத்
தெரிந்த பாஸ் தேவை.
தங்குமிட வசதி
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
cs22846 (2/6)
076 652 0414

**பாவித்த பழைய பொருட்கள் விற்பனைக்கு**

பாவித்த பழைய தகரம், அலுமினிய துண்டு, இரும்புகள், பிளாஸ்டிக் பொருட்கள் உடைந்த கதிரைகள் விற்பனைக்கு உண்டு.
(CS 22346)(3/6)
T.P : 077 731 8740

**காணி விற்பனைக்கு**

பழைய வாய்க்கால் வீதி மிருசுவிலில் A 9 வீதியிலிருந்து 600 m உள்ளே 36 பரப்பு (18 பரப்புக்களாக இரண்டு துண்டு) காணி விற்பனைக்கு உண்டு.
(CS 48387) (3/6)
+94 762 021 675

**உடனடி வேலை வாய்ப்பு**

புதிதாக தொடங்கவிருக்கும் food city இக்கு O/L, A/L, கணினி அறிவுடைய காசாளர், விகிதர் படித்த அனுபவமுள்ள GIRLS எதிர்பார்க்கின்றோம் மற்றும் office boy (19- 23) தகைமை அடிப்படையிலும், அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
(யாழ். அண்மித்தவர்களுக்கு முன்னுரிமை) சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (உடன் தொடர்புகொள்ளவும்)
074 386 5544, 070 7177544

**வேலைவாய்ப்பு**



யாழில் இயங்கிவரும் எமது நிறுவனத்திற்கு இரவுநேர (முழுநேரம் / பகுதிநேரம்) வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

1). மெசின் மைண்டர்
2). உதவியாளர் (பழகவிரும்புவர்களும்) தேவை

ஆர்வமுள்ளவர்கள் நாளை (03.01.2023) புதன் கிழமை காலை 09.30 - 11.30 மற்றும் மாலை 05.30 - 07.30 மணிவரை நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு சமுகம் தரவும்.

**உதயன் பணிமனை**
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் **கோயிலாக்கண்டி பகுதியில்**
**24 பரப்புக்** காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- A32 பிரதான வீதியில் இருந்து 600M தூரம்
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இருவழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும், சாவகச்சேரி நகரத்திற்கும் அரச, தனியார் பஸ் போக்குவரத்து சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்) நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது) ஒரு பரப்பின் விலை 675000 ரூபாய் மட்டுமே.
- **பார்வையிடும் நேரம்:-** காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை.

தொடர்பு:- **ஜெயம் 077 8147 389**
**077 2417 589**

**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில்**
**10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

**நிலப்பரப்பு**

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன். 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- பெரிய நாகதம்பிரான் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- A-9 பிரதான வீதியில் இருந்து 700 M தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 62 உள்ளன.
- குடிதண்ணீர் கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன. (பைப் லைனிங்)
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

பார்வையிடும் நேரம் :
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

தொடர்பு:- **ஜெயம் 077 9865 457**
**077 0267 619**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org